செ.வெ.எண்: 19/மார்ச் நாள்: 10.03.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

## கீழக்கரையில் கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை- ஏர்வாடி முனை சாலையில் இன்று (10.03.2016) கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்ட வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி நூறு சதவீத வாக்குப்பதிவினை எய்திடும் வகையில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் கீழக்கரை- ஏர்வாடி முனை சாலையில் கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்ட வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இப்பேரணியில் கீழக்கரை தாசீம்பீவி அப்துல்காதர் மகளிர் கல்லூரி மற்றும் செய்யது ஹமீதா கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய கல்லூரிகளைச் சார்ந்த 500-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். மாணவ, மாணவியர்கள் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த வாசகங்கள் அடங்கிய பதாதைகளை கையில் ஏந்தியபடியும், வாக்காளர் விழிப்புணர்வு குறித்த வாசகங்களை முழக்கமிட்டும் பேரணியாக சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இப்பேரணியானது ஏர்வாடி முனை சாலையில் தொடங்கி பேருந்து நிலையம் வழியாக கடற்கரை சாலையில் சென்று நிறைவடைந்தது.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன், வட்டாட்சியர் திருமதி.கமலா பாய், செய்யது ஹமீதா கல்லூரி முதல்வர் மரு.இ.ரஜபுதீன், தேர்தல் கண்காணிப்பு அலுவலர் திரு.ஜி.முகம்மது இப்ராகீம், தேர்தல் துணை வட்டாட்சியர் திரு.பாலசரவணன், மண்டல துணை வட்டாட்சியர் திரு.கல்யாணகுமார், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் திரு.எம்.ஆனந்த், உடற்கல்வி இயக்குநர் திரு.தவசிலிங்கம் உட்பட பேராசிரியர்கள், மாணவ,மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**